களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# தொல்காப்பியத்தில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்

திருமதி. நீ.பி விமலானந்தி [அ*]

(பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்)
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, அன்னை வயலட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சென்னை-53

முனைவர்.செ.ரெஜினா [ஆ*]

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி தன்னாட்சி, பெரியகுளம்

# An adjective denoting an object in Tholkappiyam

Mrs. Mr. P Vimalanthi [a*]
(Part-time Doctoral Researcher, Mother Teresa Women's University, Kodaikanal)
Assistant Professor, Tamil Nadu, Mother Violet Arts and Sciences College Chennai-53 Email: vimalananthi131@gmail.com

Dr. S. Regina [b*]
Assistant Professor, Jayaraj Annapakyam Women's College Autonomous, Periyakulam, Tamil Nadu
Email: vimalananthi131@gmail.com

Abstract

This article is about Tolkappiyam system of adjectives. Thollkappiyam is the first grammar book of Tamil language. It has three chapters and each chapter is divided into nine verses. The book contains twenty seven verses. They are one Noun Verb three Interjection Adjective in which nouns and verbs are the main words and interjections are dependent words. The purpose of this article is to examine what Thollkappier said in terms of adjectives music, reference, attribute, one word belongs to one object, one word belongs to many objects and many words belong to one object.

**Keywords;** Thollkappiyam, Noun, Verb, Particle, Adjective, musical Adjective, referential Adjective, attributive Adjective

**கட்டுரைச் சுருக்கம்**

இக்கட்டுரை தொல்காப்பிய உரிச்சொற்களின் அமைப்பு முறை பற்றியது. தொல்காப்பியம் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல். இது மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களாக பிரிக்கப்பட்டுள்ளது இந்நூலில் மொத்தம் 27 இயல்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் தொல்காப்பியர். இவர் சொற்களை நான்கு வகையாகப் பிரித்துள்ளார். அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல். இவற்றில் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களை முதன்மைச் சொற்களாகவும், இடையும் உரியும் இவற்றை சார்ந்து வரும் சொற்களாகும். உரிச்சொற்கள் இசை,குறிப்பு,பண்பு என்னும் பொருண்மையிலும் ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரியதாகவும், ஒரு சொல் பல பொருளுக்கு உரியதாகவும் பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாகும் வகைமை நோக்கில் தொல்காப்பியர் கூறியதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** தொல்காப்பியம், பெயர்ச்சொல், வினைசொல், இடைச்சொல், உரிச்சொல், இசை உரிச்சொல்,குறிப்பு உரிச்சொல், பண்பு உரிச்சொல்.

**முன்னுரை:**

உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் உரிய சொல் என்றும், உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் அடையாக வருவதோடு அவற்றின் பண்பையும் விளக்கி நிற்கும். கள்உரிச்சொ பெரும்பாலும் பேச்சு வழக்கில் வராத சொற்களாகும். யதாகும்செய்யுளுக்கு உரிச்சொல்இதனை தொல்காப்பியம் கூறும் உரியியலை அமைப்பியல் நோக்கில் ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரிய உரிச்சொற்களை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**உரிச்சொல் விளக்கம்:**

உரிச்சொற்கள் செவியால் உணரப்படும் இசை பற்றியும். மனதால் குறித்துணரப்படும் குறிப்புப் பற்றியும். ஐம்பொறிகளால் உணரப்படும் பண்பு பற்றியும் வரும். அவை பெயரையும் வினையையும் சார்ந்து வரும்.பெயர்ச் சொல்லைச் சார்ந்து வரும் போது பெயர்ச்சொல் போற்றும். வினைச் சொல்லைச் சார்ந்து வரும் போது வினைச்சொல் போன்று வரும்.அவை

1.ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரியது.
2.ஒரு சொல் பல பொருளுக்கு உரியது
3.பல சொல் ஒரு பொருளுக்கு உரியது.

வழக்கில் பயிலாத உரிச்சொற்களுக்கு பயின்ற உரிச்சொற்களைக் கொண்டு பொருளுணர்த்த வேண்டும். எவ்வகைப்பட்ட உரிச்சொற்களும் வெவ்வேறு பொருளுடையன என்பது நன்கு விளக்கும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு - ஆகியவற்றின் அடிப்படையில் பொருளை உணர்த்துவனவாகும். இவை செய்யுட்கே 'இசை , குறிப்பு, பண்பு - எனும் பொருள்களுக்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது' - என்று சேனாவரையர் கூறுகின்றார்.

'உரிச் சொற்களைப் பெயருக்கும் வினைக்கும் அடையாக வரும் சொற்கள் ' - என்று அ.கு. ஆதித்தர் கருதுகின்றார்.

" உரிச்சொற்களுள் சில பெயரடைகளாகவும் ,
வினை அடைகளாகவும் உள்ளன என்று
வின்லோ கருதியுள்ளதாக கோ. கிருட்டினமூர்த்தி
கூறுகிறார் "1

**உரிச்சொல் - தோற்றம்**:

தொல்காப்பியம் உரிச்சொற்களின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. எழுத்ததிகாரத்தில்.

" உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசலயினுந் தோன்றி "
( தொல்.சொல். எச்.நூ.482 )

எனவும்
உரியியலின் முதல் நூற்பாவில்

" உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி"
( தொல்.சொல்.உரி. நூ.297 )

என்று கூறி. உரிச்சொல்கள் இசை, குறிப்பு, பண்பு அடிப்படையாகப் பிறப்பன என்று கூறுகின்றது. இத்தகைய குறிப்பே பிற்கால இலக்கண அறிஞராகிய வீரமாமுனிவர் தம் தொன்னூல் விளக்கத்தின் உரையில் கூறியுள்ளார்.

" உரிச்சொற்களைக் குறிப்பு உரிச்சொல்கள்
பண்பரிச் சொற்கள்,இசையுரிச் சொற்கள்
எனவும் பாகுபாடுத்திக் காண்பதற்கு அடிப்படையா
அமைந்தது எனலாம்"2

**உரிச்சொல் தோன்றும் இடம்**:

தொல்காப்பியர் மெய்யியலில் உரிச்சொல்லையும்
" இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப"
( தொல். சொல். பெய.நூ.156 )

என்று குறிப்பிட்டு,அது பெயர், வினைகளின் இடமாக அவற்றைச் சார்ந்து தோன்றும் எனக் கூறியுள்ளார். தொல்காப்பியம் உயிரியலில்

"பெயரினும் வினையினு மெய்தடு மாறி"
( தொல். சொல். உரி.நூ.292 )

என்று குறிப்பிடுவது உரிச்சொற்கள் பெயரின்கண்ணும் வினையின் கண்ணும். பெயரைப் போன்றும் வினையைப் போன்றும் வடிவம் தடுமாறிவரும் என்பதைக் சுட்டி அவை பெயர் வினைகளை விட்டு நீங்காதனவாக அமைகின்றன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

**தொல்காப்பிய உரியியல் - அமைப்பு:**

உரியியலின் தொடக்கத்தில் 'உரிச் சொற் கிளவி விரிக்குங் காலை ( நூ.297 ) என்னும் நூற்பாவில் உரிச் சொற்களின் பொதுவிலக்கணம் கூறப்படுகிறது. அதனையடுத்து குறிப்பு, இசை, பண்பு எனும் மூன்று வகையைப் பற்றி வரும்.1.ஒரு சொல் ஒரு பொருளுக்குரியதாய் வருவனவற்றையும்.2. ஒரு சொல் பல பொருளுக்குரியதாய் வருவனவற்றையும்.3.பல சொல் ஒரு பொருளுக்குரியனவாய் வருவனவற்றையும் விளக்கிக் கூறுகின்றது.

இவ்வியலில் 99 நூற்பாக்கள் அமைந்துள்ளன. இவ்வியலில் 120 உரிச் சொற்களின் பொருள்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் குறிப்பு பற்றி வருவன 99 ,பண்புப் பற்றி வருவன 16, இசை பற்றி வருவன 5 ஆகும்.

குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்கள் மிகுதியாய் இருத்தலின் அதனையே தொல்காப்பியம் முதலில் கூறுகின்றது.

**உரிச்சொற்களும் அவை உணர்த்தும் பொருள்களும்**:

தொல்காப்பியம் இசை , குறிப்பு , பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொற்களையும். பல பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொற்களையும். ஒரு பொருளை உணர்த்தும் பல உரிச் சொற்களையும் கூறுகின்றது. இக்கட்டுரையில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொற்களை மட்டும் விவரிவாகக் காண்போம்.

**ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்**:

**இசைப் பொருண்மையில் - ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்**

தொல்காப்பியம் இசைப் பொருண்மையில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்லாக ‘இசைப்பு’ ( தொல். சொல்.நூ.303 ) எனும் ஓர் உரிச்சொல்லை மட்டும் கூறுகின்றது.

**குறிப்புப் பொருண்மையில் - ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்**

தொல்காப்பியம் குறிப்புப் பொருண்மையில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்லாக உரு, புரை, மல்லல்,ஏ, உகப்பு, உவப்பு, பயப்பு, இயைபு, சீர்த்தி, மாலை, பழுது, முழுது, வம்பு, மாதர், புலம்பு, துவன்று, முரஞ்சல், பொற்பு, வறிது, எய்யாமை, நன்று, தெவு,தெவ்வு, கழுகு, கருவி, கமம், அரி, கவ்வு, இரங்கல், கவர்வு, சேர், வியல்,வய, துயவு, உயா, உசா, வயா, புனிறு, யாணர், அமர்தல், யாண், ஐ, முனைவு, வை, எறுழ், நளி - ஆகியவற்றைக் கூறுகின்றது. இவ்வுரிச்சொற்கள் உணர்த்தும் பொருள் கீழே குறிப்பிடப் பெறுகின்றது.

**உரு** : 'உரு' எனும் உரிச்சொல் 'உட்கு'( அச்சம் ) என்னும் பொருளை உணர்த்தும்.
**புரை** : ' புரை' எனும் உரிச்சொல் ' உயர்வு ' என்னும் பொருளை உணர்த்தும்.
( தொல் . சொல்.உரி.நூ.295 )
**மல்லல்** : ' மல்லல் ' எனும் உரிச்சொல் ' வளன் ' எனும் பொருளை உணர்த்தும்.
**ஏ** : ' ஏ' எனும் உரிச்சொல் ' ' 'பெற்று' எனும் பொருளை உணர்த்தும்.
( தொல். சொல்.உரி.நூ.298)
**உகப்பு, உவப்பு** : ' உகப்பு' எனும் உரிச்சொல் ' உயர்தல்' எனும் பொருளையும்,

'உவப்பு' எனும் உரிச்சொல் 'உவகை' எனும் பொருளையும் உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.299)

**பயப்பு** : 'பயப்பு' எனும் உரிச்சொல் 'பயன் ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி.நூ.300 )

**இயைபு** :' இயைபு ' எனும் உரிச்சொல் ' புணர்ச்சி ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல்.உரி.நூ.302 )

**சீர்த்தி** : ' சீர்த்தி' எனும் உரிச்சொல் 'மிகுபுகழ்' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி. நூ.306 )

**மாலை** :'மாலை' எனும் உரிச்சொல் ' இயல்பு ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி. நூ.307 )

**பழுது** : ' பழுது' எனும் உரிச்சொல் ' பயனின்மை' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல்.உரி. நூ.318 )

**முழுது**:'முழுது' எனும் உரிச்சொல் ' எஞ்சாமை' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி. நூ.320 )

**வம்பு** : 'வம்பு' எனும் உரிச்சொல் 'நிலையின்மை' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல். உரி. நூ.321 )

**மாதர்** : ' மாதர் ' எனும் உரிச்சொல் ' காதல்' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி.நூ.322 )

**புலம்பு** : 'புலம்பு' எனும் உரிச்சொல் ' தனிமை' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி.நூ.325 )

**துவன்று** :' துவன்று' எனும் உரிச்சொல் ' நிறைவு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.326 )

**முரஞ்சல்** : ' முரஞ்சல்' எனும் உரிச்சொல் ' முதிர்வு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.327 )

**பொற்பு** : ' பொற்பு' எனும் உரிச்சொல் ' பொலிவு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல்.உரி.நூ.329 )

**வறிது** : ' வறிது' எனும் உரிச்சொல் ' சிறிது' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.330 )

**எய்யாமை** :'எய்யாமை' எனும் உரிச்சொல் ' அறியாமை' எனும் பொருளை உணர்த்தும்.( தொல். சொல்.உரி.நூ.336 )

**நன்று** :' நன்று' எனும் உரிச்சொல் ' பெரிது' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.337 )

**தெவு** :'தெவு' எனும் உரிச்சொல் கொளல் ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல்.உரி.நூ.338 )

**தெவ்வு** : ' தெவ்வு' எனும் உரிச்சொல் ' பகை' எனும் பொருளை உணர்த்தும்.

( தொல்.சொல்.உரி.நூ.340 )

**கழுமு** : 'கழுமு' எனும் உரிச்சொல் 'மயக்கம்' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.345 )

**கருவி** :' கருவி ' எனும்' உரிச்சொல் ' தொகுதி' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி.நூ.348 )

**கமம்** : ' கமம்' எனும் உரிச்சொல் ' நிறைவு ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல். சொல். உரி.நூ.349 )

**அரி** : ' அரி ' எனும் உரிச்சொல் ' ஐம்மை' ( நுண்மை ) எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.350 )

**கவவு** : ' கவவு' எனும் உரிச்சொல் 'அகத்தீடு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.351 )

**இரங்கல்** : 'இரங்கல்' எனும் உரிச்சொல் 'கழிவு' (ஒரு பொருளது கழிவால் பிறந்த வருத்தம்) எனும் பொருளையும் உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.353 )

**கவர்வு** : ' கவர்வு' எனும் உரிச்சொல் ' விருப்பு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.356 )

**சேர்** : 'சேர்' எனும் உரிச்சொல் ' திரட்சி ' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.357 )

**வியல்** :'வியல்' எனும் உரிச்சொல் 'அகலம்' எனும் பொண்மையை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.358 )

**வய** : ' வய' எனும் உரிச்சொல் 'வலி'( வலிமை)எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.360 )

**துயவு** :'துயவு' எனும் உரிச்சொல் ' அறிவின் திரிபு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.362 )

**உயா** : 'உயா' எனும் உரிச்சொல் ' உயங்கல்' ( வருந்துதல் ) எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.363 )

**உசா** : ' உசா' எனும் உரிச்சொல் ' சூழ்ச்சி' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.364 )

**வயா** : 'வயா' எனும் உரிச்சொல் ' வேட்கைப் பெருக்கம்' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.365 )

புனிறு :'புனிறு' எனும் உரிச்சொல் 'ஈன்றணிமை' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.369 )

யாணர் : ' யாணர்' எனும் உரிச்சொல் ' புதிது' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.373 )

**அமர்தல்**:'அமர்தல்' எனும் உரிச்சொல் 'மேவல்' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.374 )

**யாண்**: 'யாண்' எனும் உரிச்சொல் 'கவின்' ( வனப்பு ) எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.375 )

**ஐ** : 'ஐ' எனும் உரிச்சொல் 'வியப்பு ' எனும் பொருளை உணர்த்தும்.
( தொல். சொல்.உரி.நூ.379 )

**முனைவு** :'முனைவு' எனும் உரிச்சொல் 'முனிவு' எனும் பொருளை உணர்த்தும். ( தொல்.சொல்.உரி.நூ.380 )

**வை** : 'வை' எனும் உரிச்சொல் 'கூர்மை' எனும் பொருளை உணர்த்தும்.
( தொல்.சொல்.உரி.நூ.381 )

**எறுழ்** : 'எறுழ்' எனும் உரிச்சொல் 'வலி' எனும் பொருளை உணர்த்தும்.
( தொல்.சொல்.உரி.நூ.382 )

**நனி** : 'நனி' எனும் உரிச்சொல் 'பெருமை' எனும் பொருளை உணர்த்தும்.
( தொல்.சொல்.உரி.நூ.317 )

இவ்வாறு தொல்காப்பியம் உரிச்சொல்களை வகைப்படுத்துகின்றது.ஆனால்.நன்னூலில் மேற்குறிப்பிடப்பெற்ற உரிச்சொற்கள் கூறப்படவில்லை.

**பண்புப் பொருண்மையில் - ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்**

தொல்காப்பியம் பண்புப்பொருண்மையில் ஒரு பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்லாக பசப்பு,சாயல், வெம்மை,வாள்,கடி - ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இவ் உரிச்சொற்கள் உணர்த்தும் பொருள் கீழ்க்குறிப்பிடப்பெறுகிறது.

**பசப்பு - நிறம்**: 'பசப்பு எனும் உரிச்சொல் ' நிறம்' எனும் பண்பப்பொருளை உணர்த்துகின்றது. ( தொல்.சொல். உரி.நூ301 )

**சாயல் - மென்மை**: 'சாயல் எனும் உரிச்சொல் 'மென்மை' எனும் பண்புப் பொருண்மையை உணர்த்துகின்றது. ( தொல்.சொல்.உரி.நூ.319 )

**வெம்மை - வேண்டல்**:'வெம்மை' எனும் உரிச்சொல் 'வேண்டல்' ( விரும்பல் ) எனும் பண்புப் பொருண்மையை உணர்த்துகின்றது.
( தொல். சொல்.உரி. நூ.328 )

**வாள் - ஒளி**:'வாள்' எனும் உரிச்சொல் 'ஒளி' எனும் பண்புப் பொருண்மையை உணர்த்துகின்றது. ( தொல்.சொல்.உரி.நூ.361 )

**கடி - கரிப்பு**: 'கடி' எனும் உரிச்சொல் 'கரிப்பு' எனும் பண்புப் பொருண்மையை உணர்த்துகின்றது. ( தொல்.சொல்.உரி.நூ.378 )

தொல்காப்பியம் குறிப்பிடும் இசை, குறிப்பு, பண்பு, ஆகியவற்றின் அடிப்படையில் வருகின்ற ஒரு பொருளை உணர்த்துகின்ற ஓர் உரிச்சொல்லைப் பற்றி நன்னூல் கூறவில்லை என்பது இவ் ஆய்வின் மூலம் அறியவருகிறது.

**கடி**

' கடி' எனும் உரிச்சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்று - ஆகிய பத்துப் பொருள்களை உணர்த்தும். ( தொல் .சொல்.உரி.நூ.377) என்று கூறுகின்றது.

**தொகுப்புரை**

இவ்வியலில் ஆய்ந்தறிந்த செய்திகளிலிருந்து கீழ்க்குறிப்பிடப்பெரும் மெய்ம்மைகளை அறிய முடிகின்றது.

★ உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு ஆகிய பொருண்மையை உணர்த்தும் செய்யுட்கே உரியதாய் வரும்.

★உரிச்சொற்கள் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைச் சார்ந்து வரும்.

★ தொல்காப்பிய உயிரியலில் 99 நூற்பாக்கள் அமைந்துள்ளன. இவ்வியலில் 120 உரிச்சொற்கள் கூறப்பெறுகின்றன. அவற்றுள் குறிப்பு பற்றி வருவன 99, பண்புப் பற்றி வருவன 16, இசை பற்றி வருவன 5 ஆகும்.

★ உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு எனும் மூவகைப் பொருண்மையில்,

1. ஒரு சொல் ஒரு பொருளுக்குரிய 49 உரிச்சொற்களை தொல்காப்பியம் விளக்கிக் கூறுகின்றது.

சான்றெண் விளக்கம்

1. கோ. கிருட்டிணமூர்த்தி, தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, பக் 259 - 260
2. வீரமாமுனிவர், தொன்னூல் விளக்கம். பக். 95 - 96.
3. வீரமாமுனிவர், தொன்னூல் விளக்கம். நூ.138.

**Reference;**

1.Ilampuranar, (1973) Tholkappiyam Sollathikaran, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai India

2.Senavariya, Text. Tolkappiyam (Oratory) Chennel, Sarada Publishing House, 2005.

3.Iankumaranar, Raa, (2003) Purananuru, Kalathra press, Chennai, India.

4.Tholkaappiyar -tholkaappiyam-Sollathikaram,tamil Palkalaikazhakam,thanjavur 1988.

5.V.T. Remesubramentem. Tholkaplyam Eluthachigeram, Source and Commentary, Chennai, March 2008.